பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

25 02 2026 WEDNESDAY 7 15 PM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாஹூவுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் ஆக்கபூர்வமாக அமைந்திருந்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ், பாதுகாப்பு தளவாட உற்பத்தியை விரிவுபடுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. நாட்டின் கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றல் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக மத்திய கலாச்சார அமைச்சகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளது.

4. அணுஆயுத பரவல் தடை தொடர்பாக ஜெனிவாவில் சமரச பேச்சுவார்த்தை நடத்தும் அதிகாரிகளை அமெரிக்கா நிர்பந்திப்பதாக ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

5. நெதர்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Dev Ruparelia இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்

>>>>><<<<<

இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூவுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் ஆக்கபூர்வமாக அமைந்திருந்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இரண்டு நாள் பயணமாக இஸ்ரேல் தலைநகர் டெல்அவிவ் சென்ற பிரதமருக்கு, அந்நாட்டு பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ, பாரம்பரிய வரவேற்று அளித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இஸ்ரேல் சென்றடைந்த பின்னர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தமது பயணத்தின் மூலம் இந்தியா இஸ்ரேல் நட்புறவு மேலும் வலுப்படும் என்று தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்பம், விவசாயம், நீர் மேலாண்மை உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்தும் தாம் பேச்சு நடத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மண்டல அளவிலான அரசியல் பொருளாதார மாற்றங்கள் குறித்தும் தாம் விவாதித்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்டுள்ள இஸ்ரேலியப் பயணம், இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், அறிவியல், தொழில்நுட்பம், புதிய கண்டுபிடிப்புகள், பாதுகாப்பு, வேளாண்மை உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பு அதிகரிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய தொழில்நுட்பங்களை பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புகளையும் பிரதமரின் பயணம் ஏற்படுத்தித் தரும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இந்தியா – இஸ்ரேல் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக, இஸ்ரேலிய தூதுக் குழுவினருடன் தாம் இன்று நடத்திய பேச்சுக்கள் ஆக்கபூர்வமாக அமைந்திருந்தது என்று மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தைக்குப் பின், அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இருதரப்பினரும் இந்த பொருளாதார சீர்திருத்த நடவடிக்கையை வலுப்படுத்துவதில் ஆர்வம் கொண்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தகத்தில் உள்ள புதிய வாய்ப்புகள், புதிய கண்டுபிடிப்புகள், பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வெளிக்கொண்டு வருவது குறித்து, இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றிருந்ததாக அவர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, டெல்அவிவ்-ல் நடத்தும் பேச்சுக்கள் இருதரப்பு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்திற்கு வலுசேர்க்கும் என்று திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் பொருளாதார மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. *Nir Barkat* வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், புதுதில்லியில் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக நடைபெற்ற பேச்சுக்கள் இருநாடுகளுக்கும் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தி தந்திருப்பதாக கூறியுள்ளார்.

இந்த ஒப்பந்தம், பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ், பாதுகாப்பு தளவாட உற்பத்தியை விரிவுபடுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்திய வெளியுறவு சேவைப் பணியில் சேர்ந்துள்ள பயிற்சி அதிகாரிகளிடையே உரையாற்றிய அவர், பாதுகாப்பு தளவாடங்களை அதிக அளவில் இறக்குமதி செய்து வந்த நிலை மாறி, ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

இந்தியாவின் வளர்ச்சியை உலக நாடுகள் உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் கலாச்சார பாரம்பரிய மாண்புகளையும், இந்தியாவின் புதிய முயற்சிகளையும் உலக அரங்கிற்கு எடுத்துச் செல்லும் பணியை, வெளியுறவுத்துறை அதிகாரிகள் சிறப்பாக செய்ய வேண்டும் என்று திரு. ராஜ்நாத் சிங் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

நாட்டின் கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றல் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக மத்திய கலாச்சார அமைச்சகம், இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

இத்தகவலை தமது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ள மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத், கலாச்சார மேம்பாட்டின் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கான அடித்தளத்தைத உருவாக்கும் நோக்கில் இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் உள்ள கைவினைக் கலைஞர்களுக்கு பிரகாசமான எதிர்காலம் இந்த ஒப்பந்தத்தின் மூலம் நிறைவேறும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தொன்மை சிறப்புமிக்க உற்பத்தி பொருட்களுக்கும் சேவைகளுக்கும் உலகளாவிய அங்கீகாராத்தை இந்த ஒப்பந்தம் பெற்றுத்தரும் என்று திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

>>>>><<<<<

அணுஆயுத பரவல் தடை தொடர்பாக ஜெனிவாவில் சமரச பேச்சுவார்த்தை நடத்தும் அதிகாரிகளை அமெரிக்கா பல்வேறு உத்திகளை கையாண்டு, நிர்பந்திப்பதாக ஈரான் குற்றம் சாட்டியுள்ளது

பாதுகாப்பு, முன் எச்சரிக்கை என்ற பெயரில் பேச்சுவார்த்தை நடத்தும் அதிகாரிகளிடையே அமெரிக்கா குழப்பத்தை ஏற்படுத்துவதாக ஈரான் கூறியுள்ளது.

தங்கள் எல்லைப்பகுதியில் பத்தாண்டுகளுக்கும் மேலாக அமெரிக்காவின் போர்க்கப்பல்கள், விமானப்படைகள் அதிகளவில் நிறுத்தப்பட்டிருக்கும் நிலையில் அந்நாடு கடுமையான எச்சரிக்கைகளை விடுத்து வருவதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

பஹ்ரைனை ஒட்டி நிறுத்தப்பட்டிருந்த அந்நாட்டு போர்க்கப்பல்கள் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப், தொடர்ச்சியாக ஈரானுக்கு ராணுவ எச்சரிக்கைகளை விடுத்து வருவதாகவும் ஈரான் கூறியுள்ளது.

>>>>><<<<<

தேசிய திறன் தகுதி குழுவின் 47வது கூட்டம், புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

இதுகுறித்து மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், திறன் தகுதியை நிர்ணயிப்பதற்கான பல்வேறு தரப்பினரின் ஆலோசனைகளும், தேசிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சி கவுன்சிலின் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள திறன் தகுதி நிர்ணய அளவீடுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக அதில் கூறப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், பன்முகத் திறன் மேம்பாடு ஆகியவற்றை தகுதி நிர்ணயம் செய்வதற்கான வழிமுறைகள் குறித்தும் ஆராயப்பட்டதாக அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடைமுறைகளையும், நாடாளுமன்ற மற்றும் சட்டப்பேரவை தேர்தல் நடைமுறைகளையும் ஒருங்கிணைப்பது குறித்து, தலைமைத் தேர்தல் ஆணையம் ஆய்வு செய்து வருகிறது.

இதுதொடர்பாக, தேசிய அளவிலான பிரகடனத்தை தயாரிக்கும் பணியில், தேர்தல் ஆணையமும், மாநில தேர்தல் அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர்.

புதுதில்லியில் நடைபெற்ற வட்டமேஜை மாநாட்டில், வெளிப்படைத் தன்மையுடன், ஜனநாயக முறையில் தேர்தல் நடைபெறுவதை மேலும் உறுதி செய்வதற்கான முயற்சிகள் குறித்தும் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டுள்ளனர்.

இதனிடையே தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தேர்தலுக்கான தகவல் தளங்களை மேலும் எளிமையாக்குவது, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் பட்டியலில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தமிழகம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு செய்வதற்காக, தலைமை தேர்தல் ஆணையர் திரு. க்யானேஷ் குமார் தலைமையிலான குழுவினர் இன்று சென்னை வந்தனர்.

பின்னர், இக்குழுவினர் புதுச்சேரி சென்று, தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டனர்.

நாளை சென்னை திரும்பும் இக்குழுவினர், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுடன் இரண்டு நாட்கள் ஆலோசனை மேற்கொள்கின்றனர்

>>>>><<<<<

சென்னை, தரமணியில் அமைந்துள்ள உணவக மேலாண்மை சமையல் கலை நிறுவனத்தில் பயில்வோருக்கு, அதிக அளவு வேலைவாய்ப்பு உள்ளதாக அந்நிறுவனத்தின் பேராசிரியர் EUGINE கூறியுள்ளார்.

இந்த நிறுவனத்தில் பயில்வோருக்கு மத்திய அரசின் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - Eugine 58 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

நெதர்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Dev Ruparelia* இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*19* வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் *21-15, 21-18* என்ற செட்கணக்கில் லுத்துவேனியாவின் *Rokas Lesinskas*-ஐ வென்றார்.

*Samuel Tamang*-ம் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*>>>>><<<<<*

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Priyanshu Rajawat* இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் *21-4, 21-13* என்ற செட்கணக்கில் கனடாவின் *Timothy Lock*-ஐ வென்றார்.

*>>>>><<<<<*

டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் *Abhishek Sharma* முதலிடத்தில் நீடிக்கிறார்.

*Ishan Kishan* ஐந்தாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

*>>>>><<<<<*